வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 10.09.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 253 பக்கங்கள் : 12

# பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் அரசும் பரப்புரை கூட்டம்?

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 10

**தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் குழு ஒன்று பரப்புரை கூட்டங்களை நடத்தவுள்ளதாக அறிய வருகின்றது.**

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் சிறப்புக் குழு இன்று வவுனியாவில் கூடி ஆராயவுள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரைகளை தொடர்ந்து எதிர்வரும் 14ஆம் திகதி கட்சியின் மத்திய குழு கூடி இறுதி முடிவை எடுக்கவுள்ளது.

இதனிடையே, கடந்த முதலாம் திகதி கூடிய தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்ததுடன், தமிழ்ப் பொது வேட்பாளரை விலகுமாறும் வலியுறுத்தியிருந்தது.

இந்த நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் தமிழ் அரசுக் கட்சியினர் பரப்புரை கூட்டங்களை நடத் தத் தயாராகி வருகின்றனர்

11

# தமிழ் அரசுக் கட்சியின் சிறப்பு குழு இன்று கூடுகின்றது!

வவுனியா, செப். 10

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவால் நியமிக்கப்பட்ட சிறப்பு குழு இன்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் கூடுகின்றது.

மாவை சேனாதிராசா, சீ. வீ. கே. சிவஞானம், எம். ஏ. சுமந்திரன், சி. சிறீதரன், பா.சத்தியலிங்கம் ஆகியோர் கொண்ட குழுவே இவ்வாறு கூடுகின்றது. பொதுச் செயலாளர் பா. சத்தியலிங்கத்தின் வவுனியா பணிமனையிலேயே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளை ஆராய்ந்து அறிக்கையிடும்

11

# ஐ. நா. தீர்மானங்களை நிராகரித்தது இலங்கை!

ஜெனிவா, செப். 10

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் வெளிப்புற ஆதாரங்களை சேகரிப்பதற்கான பொறிமுறையையும் நிராகரிப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. இதில், முதல் நாளிலேயே இலங்கை தொடர்பான

11

# பொறுப்புக்கூறலுக்கு சகலரையும் உள்ளடக்கிய பொறிமுறை தேவை

## அமெரிக்கா வலியுறுத்து

ஜெனிவா, செப். 10

இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கு பக்கச்சார்பற்ற - வெளிப்படையான அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை அவசியம் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கில் தொடரும் நில கையகப்படுத்தலை இலங்கை நிறுத்த வேண்டும். மக்களின் நிலங்களை மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

11

# தமிழின அழிப்பு வரலாற்றை மூடிமறைக்கும் அரசாங்கங்கள்!

மட்டக்களப்பு, செப். 10

தமிழர் மீதான இன அழிப்பின் வரலாற்றை மூடி மறைக்கும் முயற்சியில் அரசாங்கங்கள் ஈடுபடுகின்றன என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சத்துருக்கொண்டான் படுகொலையின் 34ஆவது ஆண்டு நினைவுதினமான நேற்று நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

# ஜனாதிபதி தேர்தலையொட்டி பாடசாலைகளுக்கு விடுமுறை!

கொழும்பு, செப். 10

நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதையொட்டி, எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வாக்குப் பதிவு நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மீண்டும் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும்.

11

# இலங்கையின் பொறுப்புக்கூறல் ஐரோப்பிய ஒன்றியம் கரிசனை!

ஜெனிவா, செப். 10

இலங்கையில் போதியளவு பொறுப்புக்கூறல் இன்மை குறித்து தொடர்ந்தும் தாம் கரிசனை கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. அத்துடன், கடந்த சில வருடங்களாக இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்டமையை ஏற்றுக்கொள்வதாகவும் அது கூறியுள்ளது.

இதேநேரம், ஸ்கண்டிநேவியன் நாடுகளின் சார்பில் உரையாற்றிய பின்லாந்தின் பிரதிநிதி, “பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்காகவும்

11





## நினைவுத்தூபி கல்வெட்டு அகற்றம்

# சத்துருக்கொண்டானில் பதற்றம் பொலிஸார், இராணுவம் குவிப்பு!

மட்டக்களப்பு, செப். 10

சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுத்தூபியை புனரமைத்தவர்களை பொலிஸார் தடுத்தனர். இதையடுத்து ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பொலிஸாரும் இராணுவமும் குவிக்கப்பட்டனர்.

இதேசமயம், பொது மக்களில் 7 பேரை பிடித்துச் சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றி தடுத்து வைத்த பின்னர் வாக்கு மூலம் பதிவு செய்து விடுவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

சத்துருக்கொண்டானில் 186 பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 34ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதையொட்டி,

11

# அடிகாயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 10

அல்லைப்பிட்டியில் அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தை சேர்ந்த கஜேந்திரன் (வயது 43) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

புதிய கட்டட நிர்மாணம் நடந்து வரும் பகுதியிலேயே குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டது. சடலம் மீட்கப்பட்ட இடங்களில் இரத்தக்கறைகளும் காணப்பட்டன என்று தெரிய வருகின்றது. இதனால், குறித்த நபர்

11

# சஜித்தின் பிரசார பேரணியில் பொலிஸார் உட்பட 7 பேர் காயம்!

கண்டி, செப். 10

சஜித்தின் பிரசார பேரணியில் கொளுத்தப்பட்ட பட்டாசுகளால் 5 பொலிஸார் உட்பட 7 பேர் காயமடைந்தனர்.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக கண்டி மத்திய சந்தைக்கு அண்மையாக நேற்று திங்கட்கிழமை பிரசார பேரணி ஆரம்பமானது.

இதன்போது, ஆதரவாளர்கள் சிலர் பட்டாசுகளை கொளுத்தினர். இதில், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஐந்து பொலிஸாரும் பொதுமக்களில் இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)

# மகிந்த, நாமலுக்கு உயிர் அச்சுறுத்தல்!

## பெரமுன கட்சி முறையீடு

கொழும்பு, செப். 10

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் உயிரச்சுறுத்தல் உள்ளது என்று புலனாய்வு பிரிவு அறிவுறுத்தியுள்ளது. எனவே, அவர்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு பொலிஸாரிடம் கேட்டுள்ளதாக அந்தக் கட்சியின் ரேணுகா பெரேரா தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஜனாதிபதி வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகளுடனான

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீஸா விவகாரத்தால் நாட்டின் சுற்றுலாத்துறைக்கு பேராபத்து!

## சுற்றுலா தொழில்துறையினர் எச்சரிக்கை

கொழும்பு, செப். 10

**இலத்திரனியல் பயண அங்கீகார முறைமையை மீண்டும் செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக இலங்கை சுற்றுலாத்துறை குளிர்காலத்தில் வீழ்ச்சியை சந்திக்கலாம் என சுற்றுலாத்துறையை சேர்ந்தவர்கள் எச்சரித்துள்ளனர்.**

தற்போதைய விஸா நடைமுறை சர்வதேச பயணிகளிற்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபடி அரசாங்கம் இலத்திரனியல் பயண அங்கீகார முறையை நடைமுறைப்படுத்தாவிட்டால் வீதிக்கு இறங்கப் போவதாக சுற்றுலா தொழில்துறையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

குடிவரவுத்துறையினர் தாங்கள் நடைமுறைப்படுத்தும் சர்ச்சைக்குரிய விஎஸ்எவ் குளோபல் முறையை இடைநிறுத்திவிட்டு முன்னைய முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் இதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள சுற்றுலாத் துறையை சேர்ந்தவர்கள், சுற்றுலாப் பயணிகள் கொழும்பு விமான நிலையத்தில் விஸாவை பெறு வதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட வேண்டியுள்ளது என குறிப்பிட்டனர்.

இலங்கையை சென்றடைந்ததும் சுற்றுலாப்பயணிகளுக்கு விஸா வழங்கப்படுமா என்பது குறித்த சந்தேகம் காரணமாக இலங்கைக்கு செல்லும் பயணிகளை ஏற்றுவதற்கு சர்வதேச விமானச்சேவைகள் தயக்கம் காட்டுகின்றன எனவும் சுற்றுலாத்தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குளிர்காலம் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. சுற்றுலா தொழில்துறை ஏற்கனவே பல வீனமான நிலையில் உள்ளது. இந்த தாமதங்கள் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போக்குவரத்து எச்சரிக்கையை விடுக்கலாம். பிரான்ஸும் அவுஸ்திரேலியாவும் ஏற்கனவே அவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ளன என இலங்கை ஹோட்டல்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஹிரான் குரே தெரிவித்துள்ளார்.

(அ)

# மாணவி துஷ்பிரயோகம் சக மாணவன் கைதானார்

கொழும்பு, செப். 10

மொனராகலை, தணமல்வில பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அதே பாடசாலையில் கல்வி கற்கும் சக மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக தணமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

தணமல்வில பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

11 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவி வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெள்ளவாய நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பாணந்துறை கடலில் மூழ்கி இளைஞர் மாயம்

கொழும்பு, செப். 10

பாணந்துறை கடலில் மூழ்கி இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை, தொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவரே காணாமல்போயுள்ளார்.

காணாமல்போன இளைஞன் மேலும் சில நபர்களுடன் இணைந்து நேற்று முன் தினம் மாலை பாணந்துறை கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போது இந்த இளைஞனும் மற்றுமொரு நபரொருவரும் திடீரென கடலில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது, அங்கு கடமையிலிருந்த பாணந்துறை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் கடலில் மூழ்கிய இருவரில் ஒருவரை காப்பாற்றியுள்ள நிலையில் இளைஞன் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், காணாமல் போன இளைஞனைத் தேடும் பணியில் பாணந்துறை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். (அ)

# அடையாள அட்டை இல்லாத வாக்காளர் தற்காலிக அடையாள அட்டை பெறலாம்

கொழும்பு, செப். 10

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள், தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை மாவட்ட தேர்தல் செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் அல்லது பெருந்தோட்ட முகாமையாளர் ஊடாக இதற்கான விண்ணப்பங் களை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# ரயில் நிலைய அதிகாரி, உதவியாளர் ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கினர்!

கொழும்பு, செப். 10

மோட்டார் சைக்கிளில் ஐஸ் போதைப்பொருளை கொண்டு சென்ற ரயில் நிலைய அதிகாரி மற்றும் ரயில் நிலைய உதவியாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்குளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியுடைய 250 கிராம் 320 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் கம்பஹா - முதுன்கொட மற்றும் நீர்கொழும்பு - தெமன்ஹந்திய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 29 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று பொலிஸார் சுற்றி வளைத்தனர்.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, கசிப்பு உற்பத்தியை மேற்கொண்ட சந்தேக நபர் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அதேவேளை, அப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட 2,040 லீற்றர் கோடாவை அப்பகுதியில் வைத்து பொலிஸார் அழித்துள்ளனர். (அ)

# யுக்தியவில் 708 பேர் கைது!

கொழும்பு, செப். 10

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 708 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 702 ஆண்களும் 06 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 16 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 290 கிராம் 921 மில்லி கிராம் ஹெரோயின், 584 கிராம் 811 மில்லி கிராம் ஐஸ், 2003 கஞ்சா செடிகள் மற்றும் 900 கிராம் 588 மில்லி கிராம் கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.09.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆவணி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம்!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில்லை என்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதனை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட கிளைகள் நிராகரித்திருக்கின்றன. திருகோணமலையில் தொடங்கிய பகிஷ்கரிப்பு தற்போது கிளிநெச்சி மாவட்டக் கிளையிலும் பிரதிபலித்திருக்கின்றது. இதே போன்று, மட்டக்களப்பில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து கூட்டங்கள் நடைபெறவுள்ளன. அவ்வாறாயின், தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு என்ன பெறுமதி உண்டு?

தமிழ் அரசுக் கட்சி தற்போது யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது? எவருடைய கட்டுப்பாட்டிலும் இல்லையா? தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் "நாளொரு மேனி பொழுதொரு மேனி" என்பதுபோல் நடந்து கொள்கின்றார். அவர் நிதானமாகத்தான் இருக்கின்றாரா என்று கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தை முதலில் ஆட்சேபித்திருந்த மாவை சேனாதிராசா பின்னர் கட்சியின் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார் - தற்போது ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழ் அரசுக் கட்சியின் நிலைமை இந்தளவு மோசமாகியிருப்பது தொடர்பில் நிச்சயம் கவலைப்படத்தான் வேண்டும். ஒரு பாரம்பரியக் கட்சி மிகவும் மோசமான நிலைமைக்கு சென்றிருக்கின்றது. இந்த நிலைமை பிறிதொரு விடயத்தையும் உணர்த்துகின்றது. அதாவது, பாரம்பரிய கட்சிகளின் காலம் முடிவுறுகின்றது. ஒரு புதிய அரசியல் கலாசாரம் - அதனை முன்கொண்டு செல்ல புதிய ஆற்றலுள்ள நபர்கள் தேவைப்படுகின்றனர்.

தமிழ் அரசுக் கட்சி உறுதியான நிலையில் இல்லை. மிகவும் பலவீனமான நிலைமையை அடைந்திருக்கின்றது. அதன் உறுப்பினர்கள் எங்கு செல்வது என்று தெரியாமல் இருக்கின்றனர். உண்மையில், தமிழ் அரசுக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள்தான் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்கள். தலைவர்களை அளவுக்கதிகமாக நம்பியதால் நடுவீதியில் நிற்கின்றனர்.

சுமந்திரனின் செல்வாக்கால் கொண்டுவரப்பட்ட தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது. உண்மையில், சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கும் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு அதனை அமுல்படுத்தும் ஆற்றலை இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக பிரசாரங்களை செய்ய முடியாமல் போனால் அந்தத் தீர்மானத்தின் பெறுமதி என்ன?

## 8 மாதங்களில் 2 பில்லியன் ரூபாய் ஈட்டிய இலங்கை சுற்றுலாத்துறை!

கொழும்பு, செப். 10

இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன. குறித்த காலப்பகுதியில் இலங்கை 2.17 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 66.1 வீத அதிகரிப்பாகும் என மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. அதுபோல் இந்த வருடம் குறித்த காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், சுற்றுலாப் பயணிகளின் வருகை 50.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அத்துடன், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1.36 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகவும் மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)

## முல்லைத்தீவில் கிணற்றினுள் விழுந்த யானை நேற்று மீட்பு!



முல்லைத்தீவு, செப். 10

முல்லைத்தீவு, செம்மலை புளியமுனைப் பகுதியில் காட்டு யானையொன்று பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்துள்ளது.

இதனை அவதானித்த விவசாயிகள், பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கத்தினருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைத் தந்திருந்த அதிகாரிகள், யானையை மீட்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

மிக நீண்ட நேரப் போராட்டத்துக்கு பின்னர் குறித்த காட்டு யானை வெளியில் எடுக்கப்பட்டு காட்டுக்குள் அனுப்பப்பட்டுள்ளது.

இரண்டு வயது மதிக்கத்தக்க இந்த காட்டு யானை நீர் அருந்துவதற்காக பயணித்தபோதே கிணற்றில் விழுந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

முல்லைத்தீவு செம்மலை புளியமுனை பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்வதால், சுமார் 700 ஏக்கர் விவசாய நிலங்களில் பெரும் போக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாத நிலைமை காணப்படுகிறது.

இங்கு யானை வேலி அமைத்து தருவதாக பல தடவைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் இதுவரையிலும், யானை வேலி அமைத்து தரப்படவில்லை என இங்கு வாழும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விமானப்படை வீராங்கனை கடத்தல் தந்தை, மகன் பொலிஸாரால் கைது!

கொழும்பு, செப். 10

விமானப்படை வீராங்கனையை கடத்திய சம்பவம் தொடர்பில் தந்தை மற்றும் மகன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சீன துறைமுக விமானப் படைத் தளத்தில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவரும் அவரது தந்தையுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் வரக்காப்பொல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.


கடத்தப்பட்ட விமானப்படை வீராங்கனை தனது மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருக்கும்போது காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் விமானப்படை வீராங்கனையை கடத்திச் சென்று வீடொன்றிற்குள் தடுத்து வைத்துள்ளனர்.

இதன்போது, இந்த விமானப்படை வீராங்கனை குறித்த வீட்டிலிருந்து தப்பிச் சென்று இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உங்களிடம் பழகும் நண்பர். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**

எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். துணிச்சலாக செயல்பட வேண்டும்.

**கன்னி**

கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பி தருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள்.

**துலாம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை பகைத்து கொள்ளாதீர்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**விருட்சிகம்**

பழைய கசப்பான சம்பவங்களை பேசி கொண்டிருக்க வேண்டாம். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**தனுசு**

உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

**மகரம்**

உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். அலுவலகத்தில் மரியாதை கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். வியாபாரத்தில் அதிரடி உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**மீனம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் மன உளைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவை.ள

# எந்த தேர்தலையும் எதிர்கொள்ள அ. தி. மு. க. எப்போதும் தயார்

## பொதுச் செயலாளர் பழனிச்சாமி உறுதி

புதுக்கோட்டை, செப். 10

எந்தத் தேர்தலாக இருந்தாலும், அதைச் சந்திக்க அ. தி. மு. க. எப்போதும் தயாராக உள்ளது என்று முன்னாள் முதல்வரும், அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.



புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, 2019 - 20 இல் அரசு பாடசாலையில் படித்த மாணவர்களில் 30 பேர் மட்டுமே மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்தனர். இந்த நிலையை மாற்றத்தான், அரசு பாடசாலையில் படித்த மாணவர்களுக்கு 7. 5 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றினோம்.

பொதுமக்கள், அரசியல்வாதிகள் மட்டுமின்றி, பொலிஸ் துறையினருக்கும் தி. மு. க. ஆட்சியில் பாதுகாப்பில்லை. சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. தமிழகத்தில் அரசியல் கட்சி தொடங்குவதற்கு அனைவருக்கும் ஜனநாயக உரிமை உள்ளது.

அ. தி. மு. க. ஆட்சியில் இருந்தபோது, தொழில் முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அப்போது மு. க. ஸ்டாலின் வலியுறுத்தினார். எங்கள் ஆட்சியில் முதலீடுகளை ஈர்த்தது வெளிப்படையாகத் தெரிந்தது. ஆனால், தி. மு. க. ஆட்சியில் தொழில் முதலீடுகள் குறித்து எதுவும் வெளிப்படைத் தன்மையாக இல்லை. அதனால்தான், அனைத்து எதிர்க்கட்சிகளுமே வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றன. உள்ளூராட்சி தேர்தலாக இருந்தாலும் சரி, சட்டப்பேரவைத் தேர்தலாக இருந்தாலும் சரி, எந்தத் தேர்தலையும் சந்திப்பதற்கு அ. தி. மு. க. எப்போதும் தயாராக உள்ளது- என்றார். (எ)

# ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டுக்கு வாருங்கள்

## சிகாகோ வாழ் தமிழர்களுக்கு முதல்வர் அழைப்பு

சென்னை, செப். 10

"உங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாக வாழுங்கள். ஆண்டுக்கு ஒருமுறையாவது குழந்தைகளோடு தமிழகம் வந்து, தமிழகத்துக்கு முடிந்ததை செய்யுங்கள்" என்று சிகாகோ வாழ் தமிழர்களுக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு அரசுமுறை பயணமாக சென்றுள்ள ஸ்டாலின், சிகாகோ தமிழ் கூட்டமைப்பு மற்றும் சிகாகோ தமிழ்ச் சங்கங்கள் சார்பில் நடைபெற்ற, அமெரிக்க வாழ் தமிழர்களின் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.



இதன்போது இனம், மொழி, நாடு, சாதி, மதம், பால், வர்க்கம், நிறம் என்று எந்தப் பாகுபாட்டுக்கும் இடமளிக்காமல், உலக உயிர்கள் அனைத்துக்குமான பொதுமறையை உருவாக்கிய வள்ளுவரை தந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள் நாம். ஊரை தாண்டிய ஊரும் உலகமும் எப்படி இருக்கும் என்று அறியாக் காலத்திலேயே, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று எல்லோரையும் சொந்தமாக கருதி இலக்கியம் படைத்த புகழுக்கு சொந்தக்காரர்கள் நாம் என்றும் முதல்வர் கூறினார். (எ)

# விஜயின் தமிழக வெற்றி கழக மாநாட்டுக்கு 33 நிபந்தனைகளுடன் பொலிஸார் அனுமதி

கள்ளக்குறிச்சி, செப். 10

விக்கிரவாண்டியில் நடைபெற உள்ள தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநாட்டுக்கு 33 நிபந்தனைகளுடன் பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநாட்டை விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அடுத்த வி.சாலையில் இம்மாதம் 23ஆம் திகதி நடத்த பொலிஸாரிடம் அனுமதி கோரினார். இதையடுத்து, 21 கேள்விகளுக்கு 5 நாட்களில் பதிலளிக்க தொடர்ந்து விக்கிரவாண்டி பொலிஸார் அறிவுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து, பொலிஸாரின் கேள்விகளுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த் கடந்த 6ஆம் திகதி பதில் கடிதம் வழங்கினார். பின்னர், இதுகுறித்து பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய விக்கிரவாண்டி பொலிஸார் தற்போது 33 நிபந்தனைகளுடன் விஜயின் மாநாட்டுக்கு அனுமதி வழங்கியுள்ளனர். அனுமதி கடிதத்தை கட்சியின் விழுப்புரம் மாவட்ட பொறுப்பாளர் பரணி பாலாஜியிடம் விழுப்புரம் டி. எஸ். பி. சுரேஷ் வழங்கினார்.

மாநாட்டுக்கு அனுமதி கிடைத்ததை அடுத்து, விழுப்புரம் ஆட்சியர் அலுவலகம் முன்பு அந்தக் கட்சியினர் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.


"சீல் வைத்து வழங்கப்பட்டுள்ள அனுமதி கடிதம், கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவிப்புகளை தலைவர் விஜய் வெளியிடுவார்" என்று கட்சி நிர்வாகிகள் கூறினர்.


இதற்கிடையே, பதிவு செய்யப்பட்ட கட்சிகள் பட்டியலில் தமிழக வெற்றிக் கழகம் இடம் பெற்றுள்ளதாக கட்சித் தலைவர் நடிகர் விஜய் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவு திணைக்களத்துக்கு முன்பாக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பு!

## வவுனியா அலுவலகத்தில் நாள் ஒன்றுக்கு 60 கடவுச்சீட்டுகள் மட்டுமே விநியோகம்





**வவுனியா, செப். 10**

**கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன் 15 நாட்களுக்கு மேலாக இரவு பகலாக குழந்தைகளுடன் பொது மக்கள் காத்திருக்கும் பெரும் அவலம் நிகழ்கிறது என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கழிவு வாய்க்காலின் மிக மோசமான துர்நாற்றம், நுளம்பு கடி தொல்லை, பாம்புகளின் நடமாட்டம் என பெரும் அவலத்திற்கு முகம் கொடுத்து வாரக் கணக்கில் இரவு பகலாக படுக்கை விரிப்புக்களை விரித்து படுத்து உறங்குவதாகவும், தெரிவித்துள்ள பொது மக்கள். இந்த பெரும் அவலத்திற்கு விரைவில் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 60 கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன நிலையில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் இவ்வாறு 15 நாட்களுக்கு மேலாக வரிசையில் நிற்கின்றனர். (அ)

# பாக்கு மரத்தில் இருந்து விழுந்த சிறுவன் மரணம்!

## பசறையில் சோகம்

கொழும்பு, செப். 10

பாக்குமரம் ஏறி பாக்குமரத்தின் நுனிப்பகுதியை வெட்டிக் கொண்டிருந்த சிறுவன் நேற்று முன் தினம் மாலை தவறி கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

16 வயதுடைய கல்பொத்தபதன பரமங்கட பசறை பகுதியை சேர்ந்த சிறுவன் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாக்கு மரத்தை வெட்டுவதற்காக குறித்த சிறுவன் பாக்கு மரத்தில் ஏறி நுனிப்பகுதியில் இருந்து மரத்தினை வெட்டும் போது தவறி மரத்தில் இருந்து கீழே விழுந்தது பலத்த காயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பதுளை பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 15,000 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட போதைப்பொருள் சில மாதங்களில் மீட்பு!

கொழும்பு, செப். 10

கடந்த சில மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்ட 15,000 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 15,491 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும், 4,860 மில்லியன் ரூபா பெறுமதியான 511 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், அந்தக் காலப்பகுதியில் கேரள கஞ்சா, ஹஷிஸ், போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதைப் பொருட்களையும் கடற்படையினர் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. (அ)

# தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஆராய்ந்து பாடசாலைகளுக்கு விடுமுறை!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

அධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

கொழும்பு, செப். 10

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாடசாலை விடுமுறை வழங்குவது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.


தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஆராய்ந்து பாடசாலை விடுமுறை தொடர்பான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படுமென அமைச்சு கூறியுள்ளது.

வாக்கெண்ணும் நிலையங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை நிறைவடைந்த பின்னர் ஆரம்பிக்கப்படுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை எதிர்வரும் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் தயார்படுத்த தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தேசிய தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வியமைச்சுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# தலதா மாளிகைக்குள் திருமணத்துக்கு முன்பு படப்பிடிப்பு நடத்திய ஜோடிக்கு பெரும் சிக்கல்



கொழும்பு, செப். 10

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகைக்குள் அண்மையில் திருமணமான தம்பதியொன்று திருமணத்திற்கு முன்னரான படப்பிடிப்பு நடத்திய சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தலத்தில் உள்ள ஹெவிசி மண்டபம் மற்றும் அம்பராவா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்த ஜோடி புகைப்படம் எடுக்கப்பட்ட சம்பவம், சமூக ஊடகங்களில் கடுமையான விவாதத்தைத் தூண்டியுள்ளது.

ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல (பிரதான பரிபாலன பொறுப்பாளர்), சம்பவம் தொடர்பில் தனக்குத் தெரியப்படுத்தியதாகவும், பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் உறுதிப்படுத்தினார். இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக புகைப்படக் கலைஞருடன் தம்பதியினர் கண்டிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

# விடுமுறையில் வெளிநாடு சென்ற அரச ஊழியர்களுக்கு அறிவித்தல்

கொழும்பு, செப். 10

வெளிநாட்டு விடுமுறை நிறைவடைந்த பின்னரும் உரிய தினத்தில் கடமைக்கு சமுகமளிக்காத அரச ஊழியர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றதாக கருதப்படுவார்கள் என பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுநிர்வாக அமைச்சு செயலாளரின் கையொப்பத்துடன் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு விடுமுறை காலத்தை நீடிக்கவேண்டுமாயின் முதலாவது விடுமுறை காலம் நிறைவடைவதற்கு முன்னர் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டுமென அரச நிறுவன பிரதானிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை காலத்தை நீடித்துக்கொள்ளும் அனுமதியை பெறுவதில் ஏற்படும் சிக்கல்கள் கனவே பெறப்பட்ட விடுமுறை காலப்பகுதிக்குள் தீர்க்கப்படாவிட்டால் உரிய தினத்தில் கடமைக்கு சமுகமளிக்கவேண்டியது கட்டாயமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் வெளிநாட்டு விடுமுறை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மீறும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தல் சட்டத்தை மீறி பிரசாரத்தில் ஈடுபட்டாரா இராஜாங்க அமைச்சர்?

கொழும்பு, செப். 10

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் உள்ளிட்ட தரப்பினர் தம்புள்ளையில் தேர்தல் சட்டத்தை மீறி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததையடுத்து, பொலிஸாரால் குறித்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் மற்றும் முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகியோர் தம்புள்ளை நகரில் நேற்று முன்தினம் சுயாதீன வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.


இதன்போது, சுமார் நூறுக்கும் அதிகமானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளனர்.

இந்த செயற்பாடு தேர்தல் சட்டத்தை மீறும் செயல் என தெரிவித்து பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு

## மொறட்டுவையில் ஜனாதிபதி



கொழும்பு, செப். 10

**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் கடல் மாசுபட்டதில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களில் ஒரு பகுதியினருக்கு ஏற்கனவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள மீனவர்களுக்கு உரிய இழப்பீடுகள் உடனடியாக வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மொறட்டுவ வில்லோரவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மொறட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் தச்சர்களுக்கு ஓய்வூதியம் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி, முறைசாரா தொழில் சந்தையில் பணியாற்றும் அனைவருக்காகவும் ஆரம்பிக்கப்படும் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டம் குறித்து "இயலும் சிறீலங்கா" செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இங்கு முன்வைக்கப்பட்ட துறைமுக வசதிகளை மேம்படுத்துவதற்கான பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இந்தியாவுடன் கலந்துரையாடி வருவதாகவும் ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

சீனாவின் சோங்கிங்கிற்கு பயணிப்பதற்காக மியன்மாரில் நிர்மாணிக்கப்படும் புதிய துறைமுகத்துடன் வங்காள விரிகுடா பிராந்தியத்தை இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் இந்து சமுத்திரத்தின் மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு பிராந்தியங்களையும் கப்பல் போக்குவரத்துக்காக அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். (அ)

# இமயமலையை கேட்டால்கூட தருவேன் என்பவர்தான் சஜித்!

## சொல்கிறார் வேலுகுமார்

கொழும்பு, செப். 10

"ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம், இமயமலையைக் கேட்டால்கூட, நிச்சயம் கொண்டுவந்து தருவேன் எனக் கூறுவார். ஆனால் அதற்கான வழி என்னவென்பது அவருக்கு தெரியாது. சஜித் என்பவரின் வேலைத்திட்டம் இப்படிதான். மேடை பேச்சுக்கு வேண்டுமானால் அழகானதாக இருக்கலாம். ஆனால் நடைமுறை சாத்தியமற்றது."- என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

"ஜனாதிபதி சஜித் பிரேமதாசவின் பொருளாதார வேலைத்திட்டமானது நிலாச்சோறு ஊட்டும் கதைபோல்தான் உள்ளது. சஜித் நல்லவர், பரந்த மனம் உள்ளவர். நிறைய செய்ய வேண்டும் என கனவு காண்பவர். கனவு காண்பது நல்ல விடயம்தான்.

சஜித்திடம் சென்று, சந்திரனை கொண்டுவந்து தாருங்கள் எனக் கேட்டால் அதையும் செய்வதாக அவர் உறுதியளிப்பார். சூரியனைக் கேட்டால் அதையும் கொண்டுவந்து தருவதாக கூறுவார். ஏன்! இமயமலையைக் கேட்டால்கூட அதனை கொண்டுவந்து காட்டுவேன் என்பார். ஆனால் எவ்வாறு கொண்டுவருவது என்பது அவருக்கு தெரியாது.

இவ்வாறுதான் சஜித்திடம் உரிய வேலைத்திட்டமோ, வழிகாட்டல்களோ இல்லை.

தற்போதைய சூழ்நிலையில் இந்நாட்டை ஆளக்கூடியவர் குறைந்தபட்சம் நிதி அமைச்சராகவாவது இருந்திருக்க வேண்டும். சஜித் இவ்வாறு பதவி வகிக்கவில்லை. எனவே, அவரிடம் நாட்டை ஒப்படைத்தால் மீண்டும் வரிசை யுகம் வருவது உறுதி -என்றார். (அ)

# செல்வந்தர்களின் கடன்கள் தள்ளுபடி சாதாரண மக்கள்மீது அதிக வரிச்சுமை

## ரணிலைச் சாடுகின்றார் சஜித்

கொழும்பு, செப். 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டிலுள்ள செல்வந்தர்களின் கடன்களை தள்ளுபடி செய்வதுடன், நாட்டிலுள்ள சாதாரண மக்கள் மீதே அதிக வரிச்சுமைகளை சுமத்தியிருந்ததாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

வெலிமடை நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் சகல விவசாயிகளும் பாதுகாக்கப்படுவார்கள். வெலிமடை பகுதியிலுள்ள கிழங்கு செய்கையாளர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உர மானியங்களை வழங்கி, நாட்டின் மொத்த கேள்வியை பூர்த்தி செய்யும் அளவுக்கு விவசாயிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதிக்கு கிழங்கு செய்கையாளர்களின் நாடி துடிப்பு தெரியாது. எனினும், அவர் அனுரகுமார திசாநாயக்கவின் நாடித்துடிப்பை நன்கு அறிந்து வைத்துள்ளார். உள்நாட்டில் கிழங்குகளை அறுவடை செய்யும்போது, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

பசுமைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சலுகைகள் வழங்கப்படும். 50 கிலோகிராம் உர மூடைகளை 5,000 ரூபாவுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். ரணில் மற்றும் அனுரவினால் இதுபோன்ற சலுகைகளை வழங்க முடியாது.

அவர்களால் செல்வந்தர்களின் கடன்களை தள்ளுபடி செய்து, சாதாரண மக்கள் மீது வரிசுமைகளை சுமத்த மட்டுமே முடியும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியில் ஒவ்வொரு விவசாயிகளையும் பாதுகாப்பதற்கான விசேட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்-என்றார். (அ)

# மக்களின் வறுமையை கேலி செய்தார் ரணில்

கொழும்பு, செப். 10

தனக்கு அதிகாரத்தை வழங்கிய இந்த நாட்டின் அப்பாவி மக்கள் மீது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேலி செய்தார் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

மொறவக்க பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அந்தக் கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்- மக்களின் உணர்வுப்பூர்வமான விடயம் குறித்து பேசியதையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை கிண்டல் செய்ய ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி அந்த நகைச்சுவையை எங்களை நோக்கிச் செய்யவில்லை. மாறாக தமக்கு அதிகாரத்தை வழங்கிய இந்த நாட்டின் அப்பாவி மக்கள் மீதே இவ்வாறு கேலி செய் துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் 21ஆம் திகதி மக்கள் தகுந்த பதில் அளிப்பார்கள்-என்றார். (அ)

# லயன்களை கிராமமாக்கும் திட்டம் எதிர்க்கட்சிகளுக்கு புரிதல் இல்லை

## செந்தில் தொண்டமான் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 10

லயங்களை சுற்றியுள்ள 10 ஏக்கர் காணியை பெற்று கிராமங்களாக மாற்றுவதே நாம் காணி உரிமையாளர்களாக மாற சிறந்த தீர்மானமாக இருக்க முடியும். இதனையே செய்ய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூறியுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹப்புத்தளையில் இடம்பெற்ற ஜனாதிபதியை ஆதரிக்கும் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றும் போதே செந்தில் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உங்கள் அனைவருக்கும் தெரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி என்பது உறுதியான விடயம்.

அவரின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற போகிறார் என்பதற்காகவே நாம் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மலையக மக்களுக்கு புதிய நபர் அல்லர். கடந்த காலத்தில் மலையக மக்களுக்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கின்ற ஆதரவில் மாற்றம் வருமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. எமது முடிவில் மாற்றங்களும் இல்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு முறை முடிவு செய்துவிட்டால் அந்த முடிவில் மீண்டும் மாற்றம் இருக்காது. அதுதான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.

ஜனாதிபதிக்கு எப்போது ஆதரவு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்ததோ அன்றுமுதல் ஜனாதிபதியின் வெற்றிக்காக பாடுபட்டு வருகிறது. ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகளை முன்வந்துள்ளோம்.

அதில் முக்கிய கோரிக்கையாக லயன் அறைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்திருக்கிறோம். 1980களின் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் நாடாளுமன்றத்துக்கு முதல் முறையாக சென்றபோது மலையகத்தில் ஒரு தனி வீடு கிடையாது.

ஒவ்வொரு வருடமும் 10,000 வீடுகள் மலையகத்தில் கட்டப்படும் என அமைச்சரவை பத்திரமொன்றை மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் நிறைவேற்றி, 2015ஆண்டு ஆறுமுகன் தொண்டமான் ஐயா மறையும் வரை 36ஆயிரம் தனி வீடுகள் மலையகத்தில் கட்டப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டின் பின் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தில் 4ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 44 வருடங்களில் மொத்தம் 40ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தம் 2 இலட்சம் வீடுகள் மலையகத்தில் தேவையாக உள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொய் வாக்குறுதிகளை அளிக்காது. இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 10ஆயிரம் வீடுகள் மற்றும் அடுத்த 5 வருடத்தில் ஐயாயிரம் வீடுகள் கட்டப்படுமானால் மொத்தம் 15ஆயிரம் வீடுகள் தான் இருக்கும்.

15ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டால் இன்னும் ஒரு இலட்சத்து 85ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டும். ஐந்து தலைமுறைகளாக 200 வருடங்களாக வாழும் வாழும் வீட்டில் ஒரு ஆணி அடிக்க வேண்டும் என்றாலும் தோட்ட நிர்வாகத்திடம் செல்ல வேண்டியுள்ளது. அதனால் நாம் வாழும் வீட்டை உடைத்து கட்ட எவரிடமும் சென்று அனுமதி கோர தேவையில்லை.

வாக்காளர் அட்டையுள்ள அனைவருக்கும் வீட்டு உரிமையை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம். இது எமது உரிமை. இனி எவரிடமும் அனுமதி கோர தேவையில்லை. வீட்டு திட்டங்கள் வரும் பொது எங்காவது ஒரு மலையில் கொடுத்துவிடுகின்றனர். அதற்கு உட்கட்டமைப்புகளை செய்ய பாரிய நிதி தேவைப்படுகிறது.

அதன் காரணமாகவே லயத்தை சுற்றியுள்ள 10 ஏக்கர் காணியை எமது மக்களுக்கு வழங்குங்கள் 25 வீடுகள் கட்ட வேண்டிய இடத்தில 50 வீடுகளை கட்ட முடியும் என ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம். அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதனை ஜனாதிபதிக்கு புரிய வைக்கிறதா அல்லது எதிர்க்கட்சியினருக்கு விளக்கப்படுத்துவதா? லயங்களை சுற்றி 10ஏக்கர் காணியை பெற்று கிராமங்களாக்கி வீடுகளை உருவாக்குவது சாதகமான விடயமாகும்-என்றார். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களிடம் எஞ்சியுள்ள ஒரே ஆயுதம் வாக்குகள்தான்!

## இம்முறையாவது இலக்குத் தவறாது பிரயோகிப்போம் என ஐங்கரநேசன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 10

**தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் பலமாக முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுறும் வரைக்கும் விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களின் ஆயுதப் பலம் பேரம் பேசக்கூடிய பெரும் சக்தியா இருந்தது. இப்போது எம்மிடம் எஞ்சியிருக்கும் ஒரேயொரு ஆயுதம் வாக்குகள்தான். யுத்தத்தின் பின்னரான கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் இந்த வாக்குப் பலத்தை நாம் வீணடித்துவிட்டோம். இம்முறையாவது அவற்றை இலக்குத் தவறாது பிரயோகிப்போம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனை ஆதரித்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஏழாலை ஐக்கிய நாணயசங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின்னர் தமிழினம் அரசியல் ரீதியாக மிகமோசமாகப் பலவீனம் அடைந்துள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தை வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் ஊடாகச் சட்டரீதியாகக் கையகப்படுத்தி வருகின்றது. தமிழர் தாயகத்தின் இயற்கை வளங்களை, பொருளாதாரத்தை, பண்பாட்டைத் திட்டமிட்டுச் சிதைத்து வருகின்றது. இவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது.

தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்னையை வெறுமனே பொருளாதாரப் பிரச்னையாக மாத்திரமே உலகுக்குக் காட்டி வருகின்றார்கள். இலங்கைத் தீவில் இன்று ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குத் தமிழ் மக்கள் மீது தொடுத்த யுத்தமே மூலகாரணம் ஆகும். மாறி மாறி ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் கடன் வாங்கி யுத்தத்தை முன்னெடுத்தமையே நாட்டைப் பொருளாதாரப் படுகுழிக்குள் தள்ளியது. ஆனால், இந்தக் கசப்பான உண்மையை ஏற்க எந்தத் தென்னிலங்கைத் தலைவர்களும் தயாராக இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைத் தொடர்ந்தும் இழைத்துக் கொண்டிருக்க முடியாது. இதனைக் கருத்திற் கொண்டே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் பா. அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் தனிநபர் அல்ல் ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்தினதும் குரல். அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சங்குச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் ஓங்கி ஒலிப்போம்-என்றார்.

(அ)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்கப்போவதில்லை

## மீண்டும் கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, செப். 10

13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போவதில்லை என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது திருத்தத்தை இனவாதம் என்று சிலர் கூற முயற்சிப்பதாகவும், ஆனால் அது அவ்வாறு இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அளுத்கம பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாமல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையை உலகளாவிய போக்குவரத்து மையமாக மாற்றுதல், உலகளாவிய போக்குவரத்துத் துறையில் சேவை செய்யும் இடம். இரத்தினக்கல் தொழில்துறைக்கு எளிமையான வரிக் கொள்கை மற்றும் எளிமையான முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கை இரத்தினக்கல் தொழிலில் உலகின் மையமாக மாற்றப்படும்.

பொதுச் சேவையை எளிதாக்க வேண்டுமானால், பொதுச் சேவை அரசு இயந்திரங்கள் டிஜிற்றல் அரசு நிர்வாகமாக மாற்றப்பட வேண்டும்.

இளைஞர் சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராக, அரசு சேவையை டிஜிற்றல் மயமாக மாற்றுவதுடன், பொது சேவையை மக்களுக்கு எளிதாக்கும் திட்டம் தயாரிக்கப்படும்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்கமாட்டேன். 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் இனவாதம் அல்ல.-என்றார்.

# தனியார்துறை ஊழியர்களுக்கு மிகவிரைவில் ஓய்வூதிய திட்டம்

## அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, செப். 10

கௌரவமான மகிழ்ச்சியான ஓய்வுவாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவோம் என்ற யோசனையை தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளதாக அதன் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கமொன்றின் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஓய்வுபெற்ற பலர் அவலம் நிறைந்த துன்பகரமான வாழ்க்கையை வாழ்கின்றனர். ஓய்வு பெற்ற பின்னர் அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவேண்டும்.

நாட்டின் உற்பத்திக்கு தனியார் துறையினர் பெரும் பங்களிப்பு செய்கின்றனர். எவரும் இத்தனை வயது வரைதான் வேலை செய்யவேண்டும் என்ற ஒரு விடயம் உள்ளது ஓய்வு பெற்ற பின்னர் அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவேண்டும். தனியார் துறை ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வுதீய திட்டமொன்று எங்களிடம் உள்ளது-என்றார்.

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக வடமராட்சியில் தேர்தல் பிரசாரம் தீவிரம்



யாழ்ப்பாணம், செப். 10

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் பா.அரியநேந்திரனை ஆதரித்து, வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கேவில், கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி பகுதிகளில் நேற்று பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு வடமராட்சி கிழக்கு மக்கள் இடையே பெருகிவருவதால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இளைஞர்கள் சிலர் தாமாகவே முன்வந்து பொது வேட்பாளருக்கான ஆதரவுப் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதுடன் வீடு வீடாக சென்று தமிழ் பொது வேட்பாளருக்கான தேவையை வலியுறுத்தியதுடன் துண்டுப் பிரசுரங்களையும் கையளித்தனர்.

கேவில், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பிரதேசங்களை சேர்ந்த அதிகளவான மக்கள் பொது வேட்பாளருக்கான நியாயப்பாட்டை உணர்ந்துள்ளதாக முன்னாள் மணல்காடு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கமலதாஸ் தெரிவித்துள்ளார்.

இதில் ஜனநாயகப் போராளிகள் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், மணல்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், தாளையடி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# தலிபான்களைப் போன்ற ஆட்சியை முன்னெடுக்க அநுரகுமார முயற்சி!

## ரணில் தரப்பு பகிரங்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10

இடதுசாரி தலைவர்கள் அதிகாரத்துக்கு வந்த எந்த நாடும் முன்னேற்றமடைந்தும் இல்லை. அந்த நாட்டு மக்கள் அழகான வாழ்க்கை வாழ்ந்ததும் இல்லை, என ஐக்கிய தேசிய கட்சி கொழும்பு மாவட்ட அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தின் நோக்கமாக இருப்பது, வளமான நாடு அழகான வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும்.

ஆனால் இடதுசாது தலைவர்கள் அதிகாரத்தில் இருக்கும்



எங்காவது வளமான நாடு அழகான வாழ்க்கை இருக்கும் நாட்டொன்றை முடியுமானால் இவர்கள் காட்டவேண்டும்.

கியுபாவின் இடதுசாரி கொள்கையுடைய ஆட்சியாளரான பிடல் கஸ்ட்ரோ சிறந்த ஜனநாயக தலைவர். ஆனால் அவருக்கு அவது நாட்டை கட்டியெழுப்ப முடியாமல் போனது.

அனுரகுமார திஸாநாயக்கவும் இடதுசாரி கொள்கையுடைய தலைவர். இரண்டு தடவைகள் ஆயுத முனையில் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்தவர்.

அப்படிப்பட்ட ஒருவர் ஜனநாயக முறையில் அரசியல் கட்சி ஊடாக அதிகாரத்துக்கு வர முயற்சிக்கிறார். அவர்களின் எதிர்காலம் அனைவருக்கும் தெரியும்.

நாட்டில் வன்முறையை தோற்றுவித்து பல அழிவுகளை மேற்கொண்டவர்கள். அதனால் அவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் எவ்வாறான நிலை ஏற்படும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

அதேநேரம் அடிப்படைவாத கொள்கையுடை தலிபான் ஆட்சியை போன்ற ஆட்சிக்கே அனுரகுமார முயற்சிக்கிறார். அந்த நிலைக்கு எமது நாட்டை கொண்டு செல்ல மக்கள் இடமளிக்கப்போவதில்லை-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பயிலுநர், உத்தியோகத்தர்கள் தொழுகைக்கு செல்ல அனுமதி மறுப்பு!

## நிந்தவூரில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



நிந்தவூர், செப். 10

**நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் முஸ்லிம் பயிலுநர்களையும் உத்தியோகத்தர்களையும் தொழுகைக்கு பள்ளிவாயல் செல்ல தடை விதித்தது மற்றும் பயிற்சி, ஏனைய நடவடிக்கைகள் சீரான முறையில் இயங்கவில்லை எனக் கூறி மாவட்ட பிரதிப் பணிப்பாளரின் நடைமுறையை கண்டித்து, பயிலுநர்கள் நேற்றுக்காலை நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் குறிப்பிடும் போது,

கடந்த வியாழக்கிழமை தொழில்பயிற்சி நிலையத்தில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர்களாகிய எங்களை இங்கு தலைமைவகிக்கும் ரி. வினோதராஜா என்ற பிரதிப் பணிப்பாளர் ஜும்மா தொழுகைக்கு மற்றும் எந்த தொழுகைக்கும் செல்ல அனுமதிக்க முடியாது என காலைக்கூட்டத்தில் எங்களுக்கு அறிவித்து இங்கு கடமைபுரியும் சகோதர தமிழ் இனத்தைச் சேர்ந்த காவலாளி ஊடாக வெள்ளிக்கிழமையன்று ஜும்மா தொழுகைக்காக சென்றவேளை பிரதான நுழைவாயிலை மூடி தொழுக்காக செல்ல விடாமல் தடுத்ததன் காரணமாக முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் இங்கு கடமையாற்றும் முஹம்மட் நசீர் என்பவர் தலையிட்டு நுழைவாயிலை திறந்து எங்களை இறுதி நேரத்தில் தொழுகைக்கு செல்ல அனுமதி பெற்றுத்தந்தார்.

இவ்வாறான ஒரு நிர்வாகத்தின் கீழ் முஸ்லிம்களின் உரிமைகளில் கைவைத்து தடை விதிக்கின்ற இனவாத செயல்பாடுகளை துடைத்தெறிந்து எமது உரிமைகள் பெற்றுத் தரப்பட வேண்டும்.

நாம் இதற்கு முன் பல இடங்களில் பயிற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம். அங்கு ஜும்மா நேரத்துக்கு தொழுகைக்கு செல்லாவிட்டால் சகல முஸ்லிம் மாணவர்களையும் தொழுகைக்காக விரட்டிவிடுவார்கள். அந்தளவுக்கு நல்ல மற்ற மதத்தை மதிக்கின்ற பண்பாடு ஏனைய இடங்களில் இருக்கின்ற நிலையில் இங்கு உரிமை மறுக்கப்படுகின்றது.

எனவே, நிந்தவூர் தொழுகைகுச் செல்ல வேண்டாமென்பது மன வேதனையைத் தருவதோடு, நிந்தவூரின் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் மற்றும் ஊர்வாழ் மக்களாகிய அனைவரும் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து தீர்வினை பெற்றுத் தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த இடத்துக்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் மற்றும் அரசியல் பிரமுகர்கள் இந்த விடயமாக உரியவர்களிடம் பேசி தீர்வை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தனர்.

(எ)




# கல்முனை சாஹிரா மாணவனுக்கு மெய்வல்லுநர் போட்டியில் தங்கம்

கல்முனை, செப். 10

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டு விழாவில் 14 வயது ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஏ. ஆர். எம். றிஹாப் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இந்தப் போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

(எ)



தேசிய மட்ட முஸ்லிம் கலாசார போட்டியில் மர்ஹபா பைத் நிகழ்ச்சியில் சம்மாந்துறை வலய இறக்காமம் அல் அஷ்ரப் மத்திய கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது.



# குண்டு எறிதல் போட்டியில் மாணவிக்கு தங்கப்பதக்கம்

மட்டக்களப்பு, செப். 10

மாகாண மட்ட, குண்டு எறிதல் போட்டியில் ஒலுவில் அல் - ஹம்றா மகா வித்தியாலய மாணவி எச். எப். லுபினா முதலாம் இடம்பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டி - 2024 மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன் போதே குறித்த மாணவி தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இந்தப் பாடசாலையில் இதுவரை இரு மாணவர்கள் தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

(எ)





# விபுலானந்த அழகியல் நிறுவகத்தில் புகைப்பட கண்காட்சி ஆரம்பமானது

மட்டக்களப்பு, செப். 10

கிழக்கு பல்கலைக்கழக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் 16ஆவது புகைப்படக் கண்காட்சி, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக வளாகத்தில் ஆரம்பமானது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி எம். சிவகுமாரால் எடுக்கப்பட்ட புகைப்படங்களே காட்சிப்படுத்தப்பட்டன.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் போராசிரியர் பாரதி கெனடி புளோரன்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

இந்தப் புகைப்பட கண்காட்சியானது எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



கல்முனை ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக திருமதி பிரதீபா பார்த்தீபன் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# இஸ்லாமிய பொற்காலம் கவிதை நூல் வெளியீடு

சாய்ந்தமருது, செப். 10

சாய்ந்தமருது எம். நளிமுதீன் எழுதிய "இஸ்லாமிய பொற்காலம்" கவிதை நூல் வெளியீட்டு விழா மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனின் நெறியாள்கையில் ஏ. ஆர். மன்சூர் பௌண்டேஷன் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதே



சத்திலுள்ள இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


இந்த கவிதை நூல் வெளியீட்டின் மூலம் கிடைத்த பண அன்பளிப்புகள் நாணல் பெண்கள் இலக்கிய வட்டத்துக்கு வழங்கி வைக்கப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் லொறிமீது லொறி மோதி விபத்து

## 48 பேர் பலி, 50 பேர் காயம்



அபுஜா, செப். 10

**எரிபொருள் ஏற்றிச்சென்ற லொறி மீது மற்றொரு லொறி மோதி ஏற்பட்ட கோர விபத்தில் 48 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.**

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு நைஜீரியா. அந்த நாட்டின் நைஜர் மாகாணம் அகெயி நகரில் உள்ள நெடுஞ்சாலையில் எரிபொருள் ஏற்றிக்கொண்டு லொறி சென்று கொண்டிருந்தது.

அப்போது, வீதியின் எதிரே வேகமாக வந்த மற்றொரு லொறி எரிபொருள் ஏற்றிச்சென்ற லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் இரண்டு லொறிகளும் வெடித்து சிதறின. இதனால் 48 பேர் உயிரிழந்தனர். மேலும், 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு, மீட்புக் குழுவினர், பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

(எ)



# பெண் தலையில் சி. சி. ரீ.வி

## பாகிஸ்தானில் விநோத செயல்


கராச்சி, செப். 10

தலையில் சி. சி. ரிவி கமரா பொருத்திய படி பாகிஸ்தானில் இளம் பெண் ஒருவர் வலம் வரும் காட்சிகள் இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

சமூக ஊடகங்களில் ஒவ்வொரு நாளும் பல வகையான காணொலிகள் வெளியாகின்றன.

அதில் பாகிஸ்தானைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தலையில் சி. சி. ரிவி கமராவுடன் வீதியில் செல்கிறார். இது வித்தியாசமாக இருந்ததால் அந்தப் பெண்ணை ஒருவர் பேட்டி எடுக்கிறார்? தலையில் சி. சி. ரிவி கமரா ஏன்? என கேட்டதற்கு அந்தப் பெண் கூறுகையில், "நான் எங்கு செல்கிறேன், என்ன செய்கிறேன் என்பதை அறிந்து கொள்வதற்காக என் தந்தை இதை பொருத்தியுள்ளார். இது எனக்கு பாதுகாப்பாக உள்ளது. எனது தந்தை தான் எனது பாதுகாவலர். கராச்சியில் தாக்குதல், கொலை, பாலியல் வன்கொடுமை என பல சம்பவங்கள் நடைபெறுவது கவலையளிப்பதாக உள்ளது. ஆகையால் எனது பாதுகாப்புக்காக இந்த கமராவை என் தந்தை பொருத்தியுள்ளார். இதற்கு நான் மறுப்பு தெரிவிக்கவில்லை" என்றார்.

(எ)



# இம்ரான்கானை விடுதலை செய் பாகிஸ்தானில் மக்கள் பேரணி

லாகூர், செப். 10

முன்னாள் பிரதமர் இம்ரான் கானை விடுதலை செய்யக்கோரி பாகிஸ்தானில் மாபெரும் மக்கள் பேரணி நடைபெற்றது.

பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சப் கட்சி தலைவரான இம்ரான் கான் 2018 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். பின்னர், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தால் பிரதமர் பதவியை இழந்த இம்ரான்கான் மீது ஊழல் முதல் பயங்கரவாதம் வரை பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

குறிப்பாக, பிரதமராக இருந்த காலத்தில் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் பிரமுகர்களிடமிருந்து பெற்ற பரிசுகளை அரசிடம் ஒப்படைக்காமல் விற்று சொத்து சேர்த்து ஊழலில் ஈடுபட்டதாக இம்ரான்கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த வழக்குகளில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இம்ரான்கானை விடுதலை செய்யக்கோரி அவரது கட்சி ஆதரவாளர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சிறையில் உள்ள இம்ரான்கானை விடுதலை செய்யக்கோரி பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சப் கட்சியினர் பேரணி நடத்தினர். இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். (எ)

# தேர்தல் முடிவுகளால் பா. ஜ. க.மீதான அச்சம் துடைத்தெறியப்பட்டுவிட்டது

## ராகுல் காந்தி அமெரிக்காவில் தெரிவிப்பு

வாஷிங்டன், செப். 10

பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் காரணமாக பா. ஜ. க. மீது, நரேந்திர மோடி இருந்த அச்சம் துடைத்தெறியப்பட்டுவிட்டது என்று காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள ராகுல் காந்தி, டல்லாஸ் நகரில் இந்தியர்களுடன் உரையாடினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, இந்திய அரசியலில் அன்பு, மரியாதை, பணிவு ஆகிய மதிப்புகளை புகுத்துவது எதிர்க்கட்சித் தலைவராக எனது பங்கு என நான் நம்புகிறேன். அன்பு, மரியாதை மற்றும் பணிவு ஆகியவை எந்த கட்சியிலும் இல்லை என்று நான் நினைக்கிறேன். இன்னும் ஐந்து வருடங்கள் கழித்து நான் என்னை வெற்றிபெற்ற ஒருவராக பார்ப்பேனா என்று கேட்டால், அன்பு என்ற கருத்தை இந்திய அரசியலில் முன்னணியில் கொண்டு வர நான் உதவியிருக்கிறேனா? நான் உட்பட



அரசியல்வாதிகளை இன்னும் பணிவு கொண்டவர்களாக ஆக்கிவிட்டேனா? இந்திய மக்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் மரியாதையை நான் அதிகரித்திருக்கிறேனா? என்ற மூன்று விடயங்களால் நான் அதனை அளவிடுவேன்.

இந்தியா என்பது ஒற்றை கருத்து என்று ஆர். எஸ். எஸ் நம்புகிறது. இந்தியா என்பது பல கருத்துகள் என்று நாங்கள் நம்புகிறோம். சாதி, மொழி, மதம், பாரம்பரியம் அல்லது வரலாறு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரும் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும், கனவு காண அனுமதிக்கப்பட வேண்டும், அனைவருக்கும் இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். இதுதான் எங்களுக்குள் இருக்கும் முரண் சண்டை.

நவீன இந்தியாவின் அடித்தளம் அரசமைப்பு. இந்தியப் பிரதமர் இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் தாக்குகிறார் என்பதை இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டபோது, இந்த சண்டை தேர்தலில் எதிரொலித்தது. நான் அரசியல் சாசனத்தை முன்வைத்தபோது, நான் சொல்வதை மக்கள் புரிந்துகொண்டார்கள். பா. ஜ. க. நமது பாரம்பரியத்தை தாக்குகிறது, நமது மொழியை தாக்குகிறது, நமது மாநிலங்களை தாக்குகிறது, நமது வரலாறுகளை தாக்குகிறது என்று அவர்களும் கூறினர்.

தேர்தல் முடிவு வந்த சில நிமிடங்களிலேயே, இந்தியாவில் பாஜகவைக் கண்டும், இந்தியப் பிரதமரைக் கண்டும் யாரும் பயப்படவில்லை என்பதை நாம் பார்த்தோம். எனவே இவை மிகப்பெரிய சாதனைகள் - என்றார்.

(எ)

# வியட்நாமை புரட்டிப்போட்ட யாகி; பலி எண்ணிக்கை 21ஆக அதிகரிப்பு

ஹனோய், செப். 10

வியட்நாமை புரட்டிப் போட்ட யாகி புயலால் பலி எண்ணிக்கை 21 ஆக அதிகரித்தது.

இந்தப் புயல் காரணமாக கடலோர பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பிலிப்பைன்சில் உருவான யாகி புயலால் கடந்த வாரம் அங்கு கனமழை பெய்தது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி 14 பேர் பலியாகினர். சீனாவை தாக்கிய யாகி சூறாவளி வியட்நாமை தாக்கியது. வியட்நாமின் வடக்கு கடலோர பகுதி மாகாணங்களான குவாங் நின், ஹைபாங் ஆகிய பகுதிகளில் மணிக்கு 149 கிலோ மீற்றர் வேகத்துடன் புயல் கரை கடந்தது. இதனால் பலத்த காற்றுடன் பல மணி நேரம் கன மழை கொட்டியது.

இந்த நிலையில், யாகி புயல் மற்றும் மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்தது. 229 பேர் காயமடைந்துள்ளனர். வேருடன் சாய்ந்த மரங்கள், இடிந்து விழுந்த மின்கம்பங்கள் மற்றும் வீடுகளின் கூரைகளை அப்புறப்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன.



(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியம் நிறைந்த மன்னார் மாந்தை சோழமண்டல குளம் குறித்து கள ஆய்வு

**பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில்**

மன்னார், செப். 10

**மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு சோழமண்டல குளம் பகுதியின் சில முக்கியமான இடங்களில் தொல்லியல் தொடர்பான கள ஆய்வு, நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோழமண்டல குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடப்பெயர்களின் தன்மைக்கேற்ப, சோழர்களாலும் அதற்கு முந்தைய காலத்தில் பண்டைய தமிழர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்திருக்கலாம் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் அப்பகுதியின் சில முக்கியமான இடங்களில் தொல்லியல் தொடர்பான கள ஆய்வு, பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரனின் ஒழுங்கமைப்பிலும் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ் கந்தகுமாரின் தலைமையிலும் மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசனின் வழி நடத்தலிலும் இந்த கள ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த கள ஆய்வின்போது தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான, பல விதமான சட்டி, பானை, ஓட்டுத் தண்டுகள் சேட் எனப்படும் கல் இரும்புத் தாது பெறக்கூடிய கற்கள் போன்ற பல சான்றுப் பொருட்கள் நிலத்தின் மேல் பகுதியில் மேலதிக ஆய்வுகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த தொல்லியல் கள ஆய்வில் முன்னாள் தொல்லியல் துறை விரிவுரையாளர் கந்தசாமி கிரிகரன் மன்னார் ஊடகவியலாளர் ஜெகன் மற்றும் இலுப்பைக்கடவை கிராமத்தைச் சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

இந்த தொல்லியல் கள ஆய்வு தொடர்பாக பேராசிரியர் புஸ்பரட்ணம் கருத்து வெளியிடுகையில்-

இந்தப் பிரதேசமானது இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட ஒரு பல்லின சமூகம் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருந்த இடம் என்பதை என்னால் அடையாளப்படுத்தக் கூடியதாக இருந்தது.

இங்கே பறங்கியர் குளம் பறங்கியகாமம் காணப்படுகிறது.

இவை 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வட இலங்கை மீது படையெடுத்த போது மன்னார் மாவட்டம் அவர்களுடைய முதல் ஆதிக்கத்திற்கு விழுந்த இடம்.

அதன் விளைவாக இந்த சமூகம் ஒன்று எங்கே குடியேறி இருந்திருக்க வேண்டும்.

அதே நேரத்தில் இங்கிருந்த நெல், யானை மற்றும் யானை தந்தத்தங்களை பெறுவது போர்த்துக்கேயரின் ஒரு நோக்கமாக இருந்தது.

இதனால் அவர்களுடைய ஆதிக்கம் இங்கு இருந்ததை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது.

அதற்கு அப்பால் பல்வேறு குளங்கள் சோழமண்டலக் குளத்தைச் சுற்றி வட்டாரத்தில் இருப்பதை எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பிரதேசம் மக்கள் குடியிருப்புகளாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தக் கூடிய பல வகையான வடிவங்களில் அமைந்த மண்பாண்ட ஓடுகள் எம்மால் கண்டுபிடிக்க கூடியதாக இருந்தது.

எப்படி அனுராதபுரத்தில் ஒரு தொன்மையான நாகரீகம் உருவாகி வளர்வதற்கு மல்வத்து ஓயா ஒரு காரணமாக இருந்திருக்கின்றதோ இந்தப் பிரதேசத்திலே தொன்மையான நாகரீகம் உருவாகுவதற்கு பறங்கியரும் ஒரு முக்கிய காரணமாக அமையலாம் என்பது என்னுடைய கருத்து.

இந்தக் கருத்தை நாம் மேலும் உறுதிப்படுத்துவதற்கு இந்தப் பிரதேசத்தில் சில அகழ்வாய்வுகள் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது-என்றார். (அ)

# அராலி பாலத்தடியில் விபத்து; இளைஞர் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 08

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பாலத்துக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதன்போது அராலி கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த லோகேநாதிரம் கஜேந்திரன் என்ற 29 வயது இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

நேற்றிரவு ஓட்டுமடம் பகுதியிலிருந்து வட்டுக்கோட்டை பக்கமாக வந்த ஹையஸ் ரக வாகனம் ஒன்று வீதியை கடக்க முற்பட்ட இளைஞன் மீது மோதியது.

இதன்போது குறித்த இளைஞனின் தலையில் அடிபட்டு பலத்த காயம் ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த இளைஞன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்து சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கிருமித் தொற்றுக்கு இலக்காகி பெண் பலி!

யாழ்ப்பாணம், செப். 10

கண்ணாடி துண்டுகள் வெட்டிய காயத்திற்கு உரிய சிகிச்சை பெறாமையால் கிருமி தொற்றுக்கு இலக்காகி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில், யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை சேர்ந்த தயாரூபன் உதயகுமாரி (வயது 50) எனும் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் குறித்த பெண்ணுக்கு காலில் கண்ணாடி துண்டுகள் வெட்டியதால் ஏற்பட்ட காயத்திற்கு, உரிய சிகிச்சை பெறாதமையால் காலில் வீக்கம் ஏற்பட்ட நிலையில், அதற்கு தனியார் மருத்துவ மனை ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளார்.

தொடர்ந்தும் காயம் குணமாகதாதல் கடந்த 03ஆம் திகதி யாழ், போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றைய தினம் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கிருமி தொற்று ஏற்பட்டமையால், மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

தேர்தல் துண்டுப்பிரசுர விநியோகம்

# அதிகபட்சம் 5 பேர் மட்டுமே வீடுகளுக்கு செல்ல முடியும்!

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

கொழும்பு, செப். 10

ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளர்களின் தேர்தல் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்காக அதிகபட்சம் 05 பேர் மாத்திரமே வீடுகளுக்குச் செல்ல முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் இன்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் 11ஆம்,12ஆம்,13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளிலும் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னர் வீடுகளுக்குச் சென்று வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நிறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத வாக்காளர்கள் எதிர்வரும் 18ஆம்,19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் தங்களது பகுதிகளுக்குப் பொறுப்பான தபால் அலுவலகத்துக்குச் சென்று தங்களது அடையாள அட்டையைக் காண்பித்து வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதி தபால் மாஅதிபர் ராஜித கே. ரணசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# தேங்காய் விலை உயர்வு

கொழும்பு, செப். 10

தேங்காய்க்கு சந்தையில் தற்போது நிலவும் விலை இந்த வருட இறுதி வரை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

தேங்காய் ஏற்றுமதிக்கான தேவை அதிகரித்துள்ளதன் காரணமாக தேங்காய் ஒன்றின் விலை 120 ரூபாவாக நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கல்விசாரா பணியாளருக்கு மணிவிழா

யாழ்ப்பாணம், செப். 10

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அலுவலக சேவை உதவியாளர் ஐயாத்துரை ரவிச்சந்திரனின் மணிவிழா கடந்த 06 ஆம் திகதி கலாசாலையின் ரதிலக்ஷுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. கலாசாலையின் கற்பித்தல் சாரா அலுவலர்கள் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து மங்கள இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது. தொடர்ந்து மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன இதனை கற்பித்தல் சாரா அலுவலர் கணநாதன் சஜிவ் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் வாழத்துரைகள் இடம்பெற்றன. இதனை கலாசாலையின் பிரதி அதிபர்களான க. செந்தில்குமரன், த. கோபாலக்கிருஷ்ணன், உப அதிபர் சத்தியா ரஞ்ஜித், முன்னாள் அதிபர்களான வே. கா.கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம், தலைமை முகாமைத்துவ உத்தியோகத்தர் நிசந்தி பிரதீபன், விரிவுரையாளர் சி. மனோகரன், விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம், ஆசிரிய மாணவி அஸ்மிலா பேகம் ஆகியோர் வழங்கினர். கவிஞர், விரிவுரையாளர் வேல் நந்தகுமார் மேற்கொண்டார்.





தொடர்ந்து கலாதீபம் செப்ரெம்பர் மாதத்திற்கான இதழ் வெளியீடு செய்யப்பட்டது. இதில் ஐ. ரவிச்சந்திரன் பற்றிய வாழ்த்துச்செய்திகள் சிறப்பாக இடம்பெறறுள்ளன. இதன் வெளியீட்டுரையை கலாதீபம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தர்ஷினி முத்துராஜா மேற்கொண்டார்.

ரவிச்சந்திரன் பற்றிய வாழ்க்கை வரலாற்று ஆவணப்படம் ஆசிரிய மாணவர்களால் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது...

என்று அறிய வருகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் அரசுக் கட்சி யினரால் நடத்தப்படும் இந்தப் பரப்புரை கூட் டங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச் சியி ல் நடத்தப்பட ஏற் பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பரப்புரைக் கூட்டங்களில் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் பகிரங்கமாக மேடை யேறி பிரசாரத்தில் ஈடுப டுவர் என்று கூறப்படு கின்றது. எனினும், இந்தக் கூட்டங்கள் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு பின்னர் வெளியிடப்படும் என்று அறிய வருகின்றது.

இதனிடையே, நேற் றைய தினம் மட்டக்களப் பிலும், நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடந்த பரப்புரை கூட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் பங் கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

எனினும், வாக்கு எண்ணும் நிலையங்களாக செயல்படும் பாடசாலைகள் எதிர்வரும் 18ஆம் திகதி பாடசாலை முடிவடைந்த பின்னர் அந்தப் பகுதிக்கு பொறுப்பான கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்படும். அந்தப் பாடசாலைகளுக்கு 19ஆம் திகதி விடுமுறை அளிக்கப்படும். இந்தப் பாடசாலைகள் மீண்டும் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழின...

மேலும், சத்துருக்கொண்டானை சூழவுள்ள கிராமங்களில் வசித்த 186 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனை இராணுவத்தினர் மாத்திரம் செய்யவில்லை. இராணுவத்துடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்தே இந்தப் படுகொலையை செய்திருந்தார்கள். இன்று 34ஆவது நினைவேந்தலை அனுஷ்டிக்கும் போது, வழமை போன்று, நினைவேந்தல் ஏற்பாட்டாளர்கள், படுகொலை சம்பவம் தொடர்பில் வெளிப்படுத்தும் பதாகைகளை காட்சிப்படுத்த முயன்றனர். அது பொலிஸாரால் அத்துமீறி அகற்றப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

வரலாறுகளை மறைக்கின்ற நடவடிக்கையைத்தான் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கங்கள் செய்து கொண்டிருக்கின்றன. இனப்படுகொலையை இராணுவத்துடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவற்படையினரும் செய்தனர் என்பது இன்று, நேற்றல்ல 34 வருடங்களுக்கு முன்பே எமக்குத் தெரியும். நான் இதனை பல முறை பாராளுமன்றத்திலும் பதிவு செய்துள்ளேன். கடந்த காலங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்குபற்றும் போதும் வெளிப்படுத்தியிருக்கின்றேன்.

1990ஆம் ஆண்டு எம்மை பிரித்தாளுகின்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒரு சிறுபான்மை இனத்திலிருந்து, இன்னொரு சிறுபான்மை இனத்தைப் பிரித்து முஸ்லிம் ஊர்காவல் படையினரை உருவாக்கியதில் வெற்றி கண்டார்கள். சத்துருக்கொண்டான் படுகொலை, கிழக்குப் பல்கலைக்கழக படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை இவற்றை செய்தவர்கள் இராணுவத்துடன் சேர்ந்திருந்த முஸ்லிம் ஊர்காவல் படையினரே. இதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

உண்மையை வெளிப்படுத்துவதில் எமக்குத் தயக்கமும் இல்லை. 34ஆவது நினைவேந்தல் தினமான இன்று, இந்தப் படுகொலையில் ஆகுதியான அனைத்துப் பொதுமக்களுக்கும் நாங்கள் அஞ்சலி செலுத்துகின்றோம். 34 வருடங்களாக இப் படுகொலைக்கான நீதிக்காக ஏங்கித் தவிக்கின்றவர்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை" என்றார். (ஐ)

## தமிழ் அரசு...

நோக்கில் இந்த சிறப்பு குழு நியமிக்கப்பட்டிருந்தது. இதன்படி, இன்று கூடி ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது முடிவுசெய்யப்படும் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே, கடந்த முதலாம் திகதி கூடிய தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை அறிவித்தது.

இந்தத் தீர்மானத்தை முதலில் மறுத்த கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மறுநாளே அந்தத் தீரமானத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியிருந்தார்.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியின் சி. சிறீதரன் உள்ளிட்ட பலர் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்தக் குழப்பங்களுக்கு முடிவு காணும் பொருட்டே இன்று கூடும் சிறப்புக் குழு விடயங்களை ஆராய்ந்து பரிந்துரைகளை சமர்ப்பிக்கும். இந்த பரிந்துரைகளின்படி, எதிர்வரும் 14ஆம் திகதி கூடும் கட்சியின் மத்திய குழு இறுதி முடிவை எட்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஐ.நா...

தீர்மானங்கள் விவாதத்துக்கு எடுக்கப்பட்டன. அமர்வில் உரையாற்றிய ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக,

"ஐ. நா. தீர்மானங்கள் இலங்கையின் சம்மதமின்றி அவை நிறைவேற்றப்பட்டமையால் அவற்றை இலங்கை நிராகரிக்கின்றது. இலங்கை பல தசாப்தகால மோதல்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தினோம். இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றினோம்.", என்றும் கூறினார். (ஐ)

## பொறுப்புக்...

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. இதில், அமெரிக்காவின் பிரதிநிதி உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் பொருளாதார மீட்சியை வரவேற்பதாகத் தெரிவித்த அவர், இலங்கையில் சித்திரவதைகள் தொடர்வது குறித்து கவலையும் வெளியிட்டார். அத்துடன், நீண்டகாலமாக காணப்படும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதல் நல்லிணக்கத்துக்கான தடையாக உள்ளது. பொறுப்புக்கூறலுக்கு தீர்வு காண்பதற்கு பக்கச்சார்பற்ற - வெளிப்படையான அனைவரையும் உள்ளடக்கிய அணுகுமுறை அவசியம் என்றும் தெரிவித்தார். (ஐ)

## இங்கையின்...

தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும் இலங்கை உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளை ஆதரிக்கிறோம் - என்றார்.

இதேபோன்று, அங்கு உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி, சமூகங்களுக்கு இடையே பதற்றத்தை அதிகரிக்கும் நில ஆக்கிரமிப்புக்கு இலங்கை தீர்வு காண வேண்டும். இலங்கையில் சிவில் சமூகம் கண்காணிக்கப்படுகின்றது - துன்புறுத்தப்படுகின்றது - என்று கூறினார்.

இதேசமயம், இலங்கை பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என கனடா வேண்டுகோள் விடுத்துள்ளது. அத்துடன், கண்மூடித்தனமான கைதுகளுக்கு வழிவகுக்கும் - சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் புதிய சட்டங்கள் குறித்து கரிசனை கொண்டுள்ளதாகவும் அந்த நாடு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மட்டக்களப்பில் வரவேற்பு!



மட்டக்களப்பு, செப். 10

சொந்த மாவட்டமான மட்டக்களப்புக்கு நேற்று வருகை தந்த தமிழ் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரனுக்கு மாவட்டத்தின் நுழைவாயிலான வெருகல் பாலம் அருகே மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பொலிகண்டி முதல் பொத்துவில் வரை தமிழ்ப் பொதுவேட்பாளருக்காக முன்னெடுக்கப்படும் நமக்காக நாம் பிரசார பணி நேற்று மட்டக்களப்பை வந்தடைந்தது.

வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் மேளதாளத்துடன் பா. அரியநேத்திரன் வரவேற்கப்பட்டார். தொடர்ந்து மோட்டார் வாகன பேரணியுடன் கதிரவெளிக்கு அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் பொது வேட்பாளர், கதிரவெளி விக்னேஸ்வரா பாடசாலை முன்றலில் இருந்து கதிரவெளி முருகன் ஆலயம் வரை கலாசார பவனியுடன் அழைத்து வரப்பட்டார். அங்கும் விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

பின்னர் வாகரை கண்டலடி துயிலுமில்லத்தில் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பொதுவேட்பாளர் அங்கிருந்து பிரசார பணியை ஆரம்பித் தார்.

அத்துடன், 359 நாட்களாக, மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரவையை மீட்டுத் தரக் கோரி சித்தாண்டியில் முன்னெடுக்கப்படும் போராட்டகளத்துக்கு சென்ற பொது வேட்பாளர் அங்கிருந்த பண்ணையாளர்களுடன் உரையாடினார்.

இதன்பின்னர், 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும், வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட, சத்துருக்கொண்டான் படுகொலையின் 34வது நினைவு தினமான நேற்று சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுத் தூபிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இதன்பின்னர், மட்டக்களப்பு நகரிலுள்ள தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கும் மரியாதை செய்தார். தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபி, அன்னை பூபதி நினைவுத் தூபியிலும் அஞ்சலி செலுத்தினார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபருமான உதயகுமார் பொதுவேட்டாளருக்கு பகிரங்க ஆதரவை தெரிவித்து நிகழ்வுகளிலும் பங்கேற்றார். (ஐ)

## சத்துரு...

நினைவுத்தூபியை புனரமைக்கும் பணியில் நேற்று பொதுமக்கள் ஈடுபட்டனர். இதன்போது, "இராணுவத்தாலும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஒட்டுக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்ட" என்று குறிப்பிட்டு, கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்களும் அடங்கிய கல்வெட்டை பதித்தனர்.

இதுபற்றி அறிந்து அங்கு வந்த கொக்குவில் பொலிஸார் அந்தக் கல்வெட்டை பதிக்க முடியாது என்று கூறினர். இதையடுத்து, கல்வெட்டை பதித்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதையடுத்து, அந்தப் பகுதியில் குழப்பம் ஏற்பட்டது.

இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் இந்தப் படுகொலையை செய்தனர் என்பது ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான ஆணைக்குழுவால் 1995ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டது. இதனை ஏன் பதிக்கக்கூடாது என்று பொலிஸாரிடம் மக்கள் கேள்வி எழுப்பினர்.

எனினும், பொலிஸார் கல்வெட்டை பதிக்கவிடாமல் வலுக்கட்டாயமாக அதனை பறித்துச் சென்றனர்.

இதையடுத்து, அங்கு நின்ற பொது மக்களில் 7 பேரை பிடித்துச் சென்று வாகனத்தில் ஏற்றித் தடுத்து வைத்தனர். பின்னர் அவர்களிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் விடுவித்தனர்.

எனினும், தொடர்ந்து அந்தப் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

**சத்துருக்கொண்டான் படுகொலை**

1990 செப்ரெம்பர் 9ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் பிரதேசங்களை சுற்றிவளைத்த இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையும் 85 பெண்கள், 10 வயதுக்குட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உள் ளிட்ட 186 அப்பாவிப் பொதுமக்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர். (ஐ)

## அடிகாயங்...

கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மகிந்த...

கூட்டம் நேற்று நடந்தது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வு பிரிவினர் கடந்த சனிக்கிழமை குறிப்பிட்டுள்ளனர். இதே போல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் உயிரச்சுறுத்தல் இருப்பதாகவும் புலனாய்வு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

எமது ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ள நிலையில் அவருக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இவ்விடயம் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ, தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் பொலிஸ் மற்றும் படைத் தரப்புக்கும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களில் நாமல் ராஜபக்ஷ முன்னிலையில் உள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷமீது பெரும்பான்மை மக்கள் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளார்கள். இந்த தேர்தலில் நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையில் பலமான அரசாங்கத்தை அமைப்போம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஆடுகளை கூலர் வாகனத்தில் கடத்தியவர் கல்லாறில் கைது!

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்று பகுதியில் இருந்து, ஆடுகளை கூலர் வாகனத்தில் கடத்திய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

21 ஆடுகளை, சுகாதார வசதி, நீர், உணவு வசதி என்வற்றை ஏற்படுத்திக் கொடுக்காமல், வாகனத்தை முழுமையாக மூடி கொண்டு சென்ற குற்றச்சாட்டு தொடர்பில், குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கான, கால்நடை வைத்தியரின் அனுமதிப் பத்திரம் இன்றி, அனுராதபுர மாவட்டத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டிலும், சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தர்மபுரம் பொலிஸார், வீதிச் சோதனை மூலம், இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (அ)

## 51 வீத வாக்காளர் அட்டை விநியோகம்

கொழும்பு, செப். 10

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் ஏற்கனவே 51 வீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாத்திரம் 3.3 மில்லியன் வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டதாக தபால் மா அதிபர் பி.சத்குமார அறிவித்தார்.

நேற்றுவரை, மொத்தம் 8.7 மில்லியன் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள வாக்காளர் அட்டைகள் இம்மாதம் 14ஆம் திகதி வரை விநியோகிக்கப்படவுள்ளன.

14ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டைகளை பெறாத நபர்கள் தங்களது அடையாளத்தை உள்ளூர் அஞ்சல் விநியோக அலுவலகத்தில் சரிபார்த்து பெறலாம் என்றும் தபால் மா அதிபர் அறிவுறுத்தினார். (அ)

## சனிக்கிழமைகளிலும் கப்பல் சேவை நடக்கும்



யாழ்ப்பாணம், செப். 10

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறைக்கு நடத்தப்படும் பயணிகள் கப்பல் சேவை மேலும் ஒரு நாள் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஓகஸ்ட் 16ஆம் திகதி ஆரம்பித்த, இந்த சிவகங்கை கப்பல் சேவை நாளாந்தம் நடைபெற்று வந்தது.

எனினும் குறைந்த பயணிகளின் வருகை காரணமாக செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கப்பல் போக்குவரத்து சேவை மட்டுப்படுத்தப்பட்டு, கிரமமாக சேவை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சனிக்கிழமைகளிலும் கப்பலை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை பயணிகளிடம் இருந்து விடுக்கப்பட்டுள்ளதாக கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

பயணிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்று எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் சனிக்கிழமைகளிலும் சிவகங்கை பயணிகள் கப்பல் இயக்கப்படும் என்று கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி வாரத்தில் செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் கப்பல் இயக்கப்படும். பயணிகள் பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இந்தநிலையில், கப்பல் நாகப்பட்டிணத்தில் இருந்து காலை 8 மணிக்கும், காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கும் புறப்படும் என்று கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் துண்டுப்பிரசுரங்களை பறித்த பொலிஸ்

**மருதங்கேணியில் சம்பவம்**



யாழ்ப்பாணம், செப். 10

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரி மருதங்கேணியில் துண்டுப்பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தபோது, பொலிஸார் துண்டுப் பிரசுரங்களை பறித்தெடுத்த சம்பவம் பதிவாகியுள்ளது.**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரி, யாழ்ப்பாணம் மருதங்கேணிப் பகுதியில் துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தபோது, அங்கு சென்ற மருதங்கேணி பொலிஸார், துண்டுப் பிரசுரங்களை பறித்தெடுத்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இதனால், மருதங்கேணி பொலிஸாருக்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகத்தவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதன் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில், துண்டுப் பிரசுரங்கள் மீள ஒப்படைக்கப்பட்டன. (அ)

# வடக்கு, கிழக்கு வலிந்து காணாற்போனோர் சங்க பிரதிநிதிகள் ஜெனிவாவுக்கு பயணம்



கொழும்பு, செப். 10

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா உட்பட சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஜெனீவாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

ஜெனிவாவுக்கு விஜயம் மேற்கொண்ட குழுவில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்க உபசெயலாளர் மற்றும் வவுனியா மாவட்ட தலைவி ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நட்டஈட்டை செலுத்திய பூஜித்

கொழும்பு, செப். 10

உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நட்டஈடாக 75 மில்லி யன் ரூபாவை முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர செலுத்தியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 30 திகதி அவர் முழுத் தொகையினையும் செலுத்தி முடித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

எட்டு தவணைகளின் அடிப்படையில் அவர் இந்த நட்டஈட்டினை செலுத்தியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்கு தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விதிக்கப்பட்டிருந்த 100 மில்லியன் ரூபா நட்டஈட்டு தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 16 ஆம் திகதி அவர் இந்தத் தொகையை செலுத்தியுள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாதுகாப்புப் படைத் தலைவரும் போதிய உளவுத்துறையைப் பெற்றிருந்தும் ஈஸ்டர் ஞாயிறு தொடர் பயங்கரவாதத் தாக்கு தல்களைத் தடுக்கத் தவறியதன் மூலம் அரசியலமைப் பின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா 75 மில்லியன் ரூபா தொகை நட்டஈடாக செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன இதுவரை தனது நட்டஈட்டை செலுத்தவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கடவுச்சீட்டு தயாரிக்கும் செயல்முறையை ஆராய போலந்து சென்ற அதிகாரிகள் குழு

கொழும்பு, செப். 10

கடவுச்சீட்டுகள் தயாரிக்கும் செயல்முறையை ஆராய்வதற்காக குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று போலந்து சென்றுள்ளது.

இ-பாஸ்போர்ட் கேள்வி கோரலால், குடிவரவுத் துறைக்கு நெருக்கடி ஏற்பட்டு, திணைக்களம் அருகே நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஒன்லைன் மூலம் திகதி பதிவு செய்யும் பணியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், புதிய கடவுச்சீட்டுகளின் கையிருப்பு ஒக்ரோபர் 25ஆம் திகதி இலங்கைக்கு கிடைக்கும் என திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி அன்றைய தினம் இலங்கைக்கு 50,000 வெற்று கடவுச்சீட்டுகள் கிடைக்கும்.

அதன் பிறகு, சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு, நாடு மேலும் 100,000 வெற்று கடவுச்சீட்டுகளை வந்து சேரும்.

புதிய வெற்று கடவுச்சீட்டில் முன் பக்கம் கறுப்பு நிறத்தில் போலந்தில் தயாரிக்கப்படுவதாக குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்திருந்தார்.

இதன்படி, இந்த வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் உற்பத்தி செயல்முறையை ஆராய்வதற்காக குடிவரவு திணைக்களத்தின் பிரதிநிதிகள் குழு போலந்தில் உள்ள சம்பந்தப்பட்ட தொழிற் சாலைக்கு சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org